REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 28 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 24 | January 28, Thursday, 2021 | 16பக்கங்கள் | 30/-

கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்தது

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தை கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை நேற்றையதினம் வைரஸ் தொற்று நோயாளர்கள் 1, 520 பேர் பூரணமாக குணமடைந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. 06

கொரோனா வைரஸ் காரணமாக நிர்க்கதிக்குள்ளாகி

வெளிநாட்டிலுள்ள பணியாளர்களை தொடர்ந்து அழைத்து வர பணிப்பு

ஜனாதிபதி செயலணியுடன் கலந்துரையாடி பிரதமர் ஏற்பாடு

22,483 பேர் நாடு திரும்புவதற்கு காத்திருப்பு

நாடு திரும்புவதற்கு எதிர்பார்த்துள்ள வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் 06

அரச வைத்தியசாலைகள் ஊடாகவே தடுப்பூசிகள்

டாக்டர் அமல் ஹர்ஷ டி சில்வா தகவல்

கொவிட்19 தடுப்பூசி அரசாங்க வைத்தியசாலைகளின் ஊடாகவே வழங்கப்படும். நாட்டில் சுமார் 1,060 அரச மருத்துவமனைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட வற்றினூடாக தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்படும் என கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். 06

சீனாவிலிருந்து 03 இலட்சம் கொரோனா தடுப்பூசி மருந்து

பெப்ரவரி நடுப்பகுதியில் வழங்க ஏற்பாடு

இலங்கைக்கு சுமார் 03 இலட்சம் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை வழங்க முடிவு செய்துள்ளதாக சீன அரசு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது. மிகப் பெரிய உள்நாட்டு மற்றும் 06

இரண்டரை இலட்சம் பேருக்கு செலுத்த ஐந்து இலட்சம் தடுப்பூசிகள்

இந்தியாவிலிருந்து இன்று வருகிறது

ஒக்ஸ்போர்

CLICK

சுப்பிரமணியம் நிஷாந்தன்

இந்திய அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்படும் ஐந்து இலட்சம் தடுப்பூசிகள் இன்று இலங்கையை வந்தடையவுள்ளதுடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரால் இந்த தடுப்பூசிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கையளிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், கொவிட்19 லணியின் பிரதானியுமான லலித் வீரதுங்க நேற்று தெரிவித்தார்.

தடுப்பூசிகள் முதல் கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள சுகாதாரத்துறைசார் ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் செலுத்தப்படுமெனவும் அவர் கூறினார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொவிட் 19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டுவர அரசாங்கம் 06

தடுப்பூசிகளை விமான நிலையத்தில் ஜனாதிபதி பொறுப்பேற்பார்

விமான சேவைகள் நிறுவன தலைவர் சந்திரசிறி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியா அன்பளிப்புச் செய்யும் 05 இலட்சம் ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா ஷெனாகா தடுப்பூசியை ஏற்றிவரும் விசேட விமானம் இன்று முற்பகல் 11 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையுமென விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்தார். இலங்கைக்கு முதல் தடவையாக கொண்டுவரப்படும் 06

தொழிற்சங்க, அரசியல் பேதங்களை மறந்து

கம்பனிகளின் அடாவடித்தனத்துக்கு பாடம் புகட்ட ஒன்றிணைவோம்

இ.தொ.ஐ.மு. செயலாளர் சதாசிவம் அறைகூவல்

நுவரெலியா தினகரன் நிருபர்

தொழிற்சங்க, அரசியல் பேதங்களை மறந்து கம்பனிகளின் அடாவடித்தனத்துக்கு பாடம் புகட்ட ஒன்றிணைவோம் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1,000 ரூபா சம்பளம் மட்டுமல்ல தொழிலாளர்களின் இன்னும் பல உரிமைகளை, 06

யாழ்ப்பாணம் 'நெடுந்தூர பஸ் நிலையம்' பொது மக்களின் பாவனைக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ். அரசாங்க அதிபர் க.மகேசன், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வாள்கள், போலி ID, சிம் கார்ட்டுகள், கமாராக்கள், பறிமுதல்

திருமலை 'குட்டிப்புலி' வன்முறை குழுவின் 'நேவி விஜி' உட்பட 05 பேர் அதிரடி கைது

கடற்படை புலனாய்வு தகவலில் STF நடவடிக்கை

திருகோணமலை தேவநகர் மற்றும் ஆனந்தபுரி பகுதியில் செயற்படுவதாக கூறப்படும் 'குட்டிப்புலி' என்ற வன்முறை குழுவின் 05 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவல்களுக்கு அமைய பொலிஸ் விசேட அதிரடி படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தேவநகர் பகுதியில் முதலாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்ட தோடு அவரிடமிருந்து 06

இராஜாங்க அமைச்சர் அருந்திக்கவுக்கு கொரோனா

இதுவரை ஏழு எம்.பிக்களுக்கு தொற்று உறுதி

இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 07ஆக 06

உணர்வுகளுக்கு மதிப்பளித்தே எனது இறுதித் தீர்மானங்கள் அமையும்

கடற்றொழிலாளர் போராட்ட களத்தில் அமைச்சர் டக்ளஸ்

கொரோனா நோயாளிகள் இனிமேல் குணமான 10 நாட்களில் விடுவிப்பு

புதிய சுற்றறிக்கை வெளியீடு

கொவிட்19 நோயாளிகளுக்கான மருத்துவ மேற்பார்வைக் காலத்தை 14 நாட்களில் இருந்து 10 நாட்களாகக் குறைத்து புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் கடமையாற்றிய

பொலிஸாரின் பாதுகாப்பை உறுதி செய்யமாறு உத்தரவு